DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case No. | : | S.C. 133/2024 |
| Deposition of Witness for | : | P.W. 5 |
| Name | : | **கிருஷ்ணவர்மன் கிட்டு** |
| Father's Name | : | செல்வம் |
| Village | : | பட்டமங்களம் |
| Taluk | : | திருப்பத்தூர் |
| Calling | : | ஹோட்டல் வேலை |
| Age | : | 26/2025 |

**(வழக்கின் எதிரிகள் 1, 2 ஆஜர் இல்லை. 1, 2 எதிரிகள் சார்பில் Cr.P.C பிரிவு 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 15.05.2025

**முதல் விசாரணை:**

நான் தற்போது பட்டமங்களத்தில் குடியிருந்து வருகிறேன். ஹோட்டலில் நான் மாஸ்டராக வேலை பார்த்து வருகிறேன். வழக்கின் எதிரிகள் இருவரையும் எனக்கு தெரியும். சாட்சி மணிகண்டன் என்பவரை தெரியும். கடந்த 2022ம் வருடம் லட்சபாண்டி என்பவருக்கும் எனக்கும் பழக்கத்தின் அடிப்படையில் லட்சபாண்டிக்கு ரூ.25000/- கடனாக கொடுத்தேன். எதிரி லட்சபாண்டி வாங்கிய கடனில் ரூ.15000/- திருப்பி கொடுத்துவிட்டார். இடையில் மீண்டும் அவர் என்னிடம் ரூ.5000/- கடனாக கேட்டு நான் அந்த பணத்தை கடனாக Gpay மூலம் அவருக்கு கொடுத்தேன். அதன்பிறகு நீண்டநாட்களாக அவர் வாங்கிய கடனை எனக்கு திருப்பி கொடுக்கவில்லை. 08.06.2023ம் தேதி நானும் செல்வமணி என்பவரும் இரவு 9.00 மணியளவில் மீனாட்சிபுரத்தில் உள்ள எதிரி லட்சபாண்டி என்பவர் வீட்டிற்கு சென்றேன். நான் போய் பார்த்தபோது எதிரி லட்சபாண்டி அவர் வீட்டில் இருந்தார்.

நான் அவரிடம் வாங்கிய கடன் பணத்தை கேட்டேன். அதற்கு அவர் நான் பணத்தை வாங்கவே இல்லை என்று சொன்னார். உடனே எனக்கும் எதிரி லட்சபாண்டிக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது. அப்போது மணிகண்டன் என்பவர் சம்மந்தமே இல்லாமல் வந்து சத்தம்போட்டார். அதன்பிறகு நான் அவரது வீட்டிலிருந்த ஆட்டை எடுத்துக்கொண்டு கிளம்பினேன். அப்போது எதிரி மணிகண்டன் பணம் எல்லாம் தரமுடியாது என்று அருவாளை எடுத்துவந்து என்னை வெட்ட வந்தார். அதில் எனது இடது கை கட்டை விரல் வெட்டுப்பட்டு அதை தற்போது பிளாஸ்டிக் சர்ஜரி மூலம் ஒட்டவைத்துள்ளேன். எதிரி மணிகண்டன் அருவாளால் என்னை தலை, இரண்டு கைகளிலும் வெட்டினார். அதன்பிறகு எதிரி லட்சபாண்டி கட்டையை எடுத்துக்கொண்டு வந்து எனது வலது கை கட்டைவிரலில் அடித்து விரலை உடைத்துவிட்டார். நான் அடிபட்டு ரத்தம் அதிகம் வந்ததால் மயக்கமாகிவிட்டேன். அதன்பிறகு ஒரு ஆம்புலன்ஸ் வந்தது. சிவகங்கை அரசு மருத்துவமனையில் கொண்டு வந்து சேர்த்தார்கள். சிவகங்கை அரசு மருத்துவமனைக்கு ஆம்புலன்சில் செல்லும்போது என்னிடம் வழக்கு சம்பவம் குறித்து என்னிடம் கேட்டு எனது வலது கை கட்டை விரல் ரேகையை பெற்றுக்கொண்டனர். போலிசார் என்னிடம் பெற்றுக்கொண்ட புகார் வாக்குமூலம் **அ.த.சா.ஆ.1** ஆகும். அதன்பிறகு நான் மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்க்கப்பட்டேன். சுமார் 1 வாரம் மதுரை அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக இருந்தேன். தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் அரிவாள்மனை மற்றும் கட்டை வழக்கு சம்பவத்தில் எதிரி என்னை தாக்க பயன்படுத்தியவை அல்ல. வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

நான் கைரேகை வைத்த பேப்பரில் எழுதியிருந்ததா, எழுதவில்லையா என்று எனக்கு தெரியாது. எனக்கு காயம் ஏற்பட்டதிலிருந்து இரண்டு நாட்கள் யாரிடம் நான் பேசவில்லை என்றால் சரிதான். 2 நாட்கள் கழித்து தான் மயக்கம் தெளிந்தேன். அதன்பிறகும் என்னை போலிசார் விசாரணை செய்யவில்லை. இந்த வழக்கின் எதிரிகள் என் மீதும் 2வது சாட்சி செல்வமணி,

3 வது சாட்சி மணிகண்டன் என்ற புறாமணி மீதும் வழக்கு தொடர்ந்து நிலுவையில் உள்ளது என்றால சரிதான். நான் செல்வமணி என்பவரை என்னுடன் நான் அழைத்து சென்றேன். நாங்கள் இருசக்கரவாகனத்தில்சென்றோம். எதிரி லட்சபாண்டி என்பவரின் வீட்டருகில் பில்லப்பன் என்பவரின் வீடு உள்ளது அவரின் வீட்டிற்கு அடிக்கடி சென்றுவருவேன் என்றால் சரிதான். லட்சபாண்டி என்பவரின் வீட்டில் 2 வெள்ளாடுகளை நாங்கள் சென்ற இருசக்கரவாகனத்தில் ஏற்றி பட்டமங்களம் கொண்டு சென்றுவிட்டோம். சாட்சி செல்வமணி என்வருக்கு வழக்குகள் உள்ளது எத்தனை வழக்குகள் உள்ளது என்று எனக்கு தெரியாது. நான் லட்சபாண்டிக்கு ரூ.25000/- கொடுத்ததற்கான எந்த ஆவணமும் எழுதி வாங்கவில்லை என்றால் சரிதான். லட்சபாண்டி என்பவர் எனக்கு நண்பரோ, உறவினரோ இல்லை என்றால் சரிதான். என்னை 108 ஆம்புலன்சை யார் வரவழைத்தது, யார் ஏற்றிவிட்டது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். லட்சபாண்டி வீட்டிற்கு போனதாக சொல்லப்படும் நேரம் இரவு 10.00 மணி இருக்கும். இரவு 10.00 மணி என்பதால் ஒருத்தர் முகம் ஒருத்தருக்கு தெரியாது என்றால் சரிதான். எனக்கும் லட்சபாண்டிக்கும் கொடுக்கல் வாங்கல் கிடையாது என்றும் நான் ஆடு திருடபோயி கிராமத்தினர் விரட்டி பிடிக்க முயற்சி செய்தபோது இருசக்கரவாகனத்தில் செல்லும்போது தவறி விழுந்ததில் காயம் ஏற்பட்டது என்றும் முதல் விசாரணையில் சொன்னது போல் எந்த வழக்கு சம்பவமும் நடைபெறவில்லை என்றும் எதிரிகளால் எந்த காயமும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை**: இல்லை

A PASUMPON SHANMUGAIAH
Digitally signed by A PASUMPON SHANMUGAIAH
Date: 2025.05.15 12:34:42 +0000

Chief Judicial Magistrate,

Sivagangai.